1987 நவம்பர் 13]

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

93. வருமானங்கள் திரட்டுதல் மற்றும் செலவினங்களை மேற்கொள்ளுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29—6—87-ம் நாளிட்ட 716-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து—சமய அற நிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.[

94. 1960-ஆம் ஆண்டு மதிப்பீடு, வரிவிதிப்பு மற்றும் நன்கொடைச் செலவுகள் பிடித்தம் செய்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 6—7—1987-ஆம் நாளிட்ட 750-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.[1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

95. கீழ்மங்கலம் மற்றும் கிருஷ்ணகிரி அங்காடிப் பகுதிகளிலுள்ள சில கிராமங்களை ராயகோட்டை அங்காடியின் அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 3—6—1987-ஆம் நாளிட்ட 1052-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

96. 1982-83-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை, [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

97. 1983-84-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

98. 1984-85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

[1987 நவம்பர் 13

99. 1984-85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

100. 1985-86-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

15. 1987-88-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

16. 1987-88-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

17. 1987-88-ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS